

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.6.2023) சென்னையில் நடைபெற்ற முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்களின் அறிவியல் ஆலோசகர் வெ. பொன்ராஜ் அவர்களின் மகன் வெ.பொ.பிரவீன்குமார் – கோ.மேரி மோனிகா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## சிகரெட் லைட்டர் இறக்குமதிக்குத் தடை:

# ஒன்றிய அமைச்சருக்கு நன்றி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜுலை 1-

பாக்கெட் சிகரெட் லைட்டர் இறக்குமதிக்கு தடை விதித்தமைக்காக ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தமது ட்விட்டர் பக்கத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

**கடந்த ஆண்டு நான் எழுதியிருந்த கடிதத்தில் கோரியபடி, எங்கள் கவலைகளுக்குச் செவிமடுத்து, பாக்கெட் சிகரெட் லைட்டர்கள் இறக்குமதிக்குத் தடை விதிக்க நடவடிக்கை மேற்கொண்டமைக்காக ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயல் அவர்களுக்கு நன்றி. இது தமிழ்நாட்டில் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோரின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான முக்கியமான நடவடிக்கை ஆகும்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில்குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் கோப்பை 2023 மாநில அளவிலான போட்டிகள் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெறுவதையொட்டி, இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த வீரர் வீராங்கனைகள் சென்னை செல்லும் பேருந்தினை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வாழ்த்துக்களை கூறி வழியனுப்பி வைத்தார். மாவட்ட ஆட்சியர் சி. பழனி, மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு டென்மார்க் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் டென்மார்க் தலைநகரம் கோப்பன்கேகனில் டென்மார்க் சுற்றுச்சூழல் அமைச்சர் மாகனஸ் – யோஹான் ஹய்னிகா மற்றும் தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது (DEPA) தலைவர் பிஃலிப் பெடர்சன் மற்றும் கூடுதல் தலைமை செயலர் நீர்வளத்துறை சந்தீப் சக்சேனா உடனிருந்தனர். சென்னையில் உள்ள அடையாறு கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாயினை நவீன தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி புனரமைப்பதற்கான இரு நாட்டினரின் ஒருங்கிணைந்த பணிக்குழுவை நியமித்துள்ளனர்.

## அமைச்சர் செந்தில் பாலாஜி நீக்கம்:

# அமைதியைச் சீர்குலைக்கும் அரசியல் சதி!

### தமிழ்நாடு ஆளுநருக்கு இரா. முத்தரசன் கடும் கண்டனம்!

சென்னை, ஜுலை 1-

“அமைச்சரவையிலிருந்து செந்தில் பாலாஜியை நீக்கி இருப்பது தமிழ்நாட்டில் அமைதியை சீர்குலைக்கும் அரசியல் சதி” என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் ஆளுநருக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையின் படி மக்கள் வாக்களித்து தேர்வு செய்து, அமைக்கப் பெற்றுள்ள சட்ட மன்றத்தின் அரசியல் அதிகாரத்தையும், மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி, அரசியல் அமைப்பு அதிகாரம் கொண்ட அமைச்சரவையினையும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பொறுப்பேற்ற ஆரம்ப நாளில் இருந்தே அலட்சியப்படுத்தியும், சிறுமைப் படுத்தியும் வருகிறார்.



எதிர்கட்சி நிலையில் இருந்தாலும் ஒன்றிய அரசுடன் இணக்கமான நல்லுறவு நீடிக்க வேண்டும் என்ற முறையில் தமிழ்நாடு அரசு, ஆளுநரின் ஆத்திரமூட்டலுக்கு ஆளாகாமல், ஜனநாயக நெறிகளை பின்பற்றி, சட்ட வழிமுறைகளை அனுசரித்து பொறுமையுடன் செயல்பட்டு வருகிறது.

இந்த நிலையில், அமலாக்கத்துறையின் நடவடிக்கையால் உடல் நலம் பாதிக்கப்பட்டு, உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வரும் அமைச்சர் வி.செந்தில் பாலாஜியை அமைச்சரவையில் இருந்து நீக்கம் செய்திருப்பதாக ஆளுநர் அறிவித்திருப்பது அனைத்து எல்லைகளையும் தாண்டி ஆபத்தான சூழலை உருவாக்கும் வன்மம் கொண்ட செயலாகும்.

அரசியலமைப்பு சட்டத்தின்படி அமைச்சரவையின் ஆலோசனைகளை ஏற்று செயல்பட வேண்டிய ஆளுநர், சட்டத்திற்கு மேலாக தன்னை நிறுத்திக் கொண்டு, எல்லையில்லா அதிகாரம் கொண்டவராக கருதி செயல்படுவது தமிழ் நாட்டின் அமைதி வாழ்வை சீர்குலைக்கும் அரசியல் சதி விளையாட்டின் வடிவமாகும்.

ஆளுநரின் மலிவான அரசியல் நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிப்பதுடன் மலிவான அரசியல் செயலில் ஈடுபட்டு வரும் ஆர்.என். ரவியை ஆளுநர் பொறுப்பில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும் என்ற மாபெரும் மக்கள் இயக்கத்தில் ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டு களம் இறங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

